# சென்னை மாகாண ஹிந்தி எதிர்ப்புக் கமிட்டி

# அவசரச் சுற்றறிக்கை.

1. ஹிந்தியைக் கட்டாய பாடமாக வைக்கின்ற பள்ளிக்கூடங்களுள்ள ஊர்களிலிருக்கும் ஹிந்தி எதிர்ப்புக் கமிட்டி மெம்பர்களும், பிற அன்பர்களும் சேர்ந்து அந்தந்த ஊர்களில் 5 பேருக்கு மேற்படாத ஒரு சப் கமிட்டியை நியமித்து, உடனே தெரிவிக்க வேண்டும்.

2. சப் கமிட்டி மெம்பர்கள் முதலில் பள்ளிக்கூட அதிகாரிகளை ஹிந்தியைப் போதிக்க வேண்டாமெனக் கேட்டுக்கொள்ள வேண்டும். இரண்டாவது பிள்ளைகளை அப்பள்ளிகளுக்கு அனுப்ப வேண்டாமென பெற்றோர்களைக் கேட்டுக்கொள்ள வேண்டும். மூன்றாவது பள்ளிக்குச் செல்லும் பையன்களை சாத்வீக முறையில் மறியல் செய்து தடைப்படுத்த வேண்டும்.

3. ஹிந்தியைக் கட்டாய பாடமாக வைக்கப்பட்டுள்ள பள்ளிக்கூடங்களுள்ள தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை மெம்பர்களை "ஹிந்தியை ஒழியுங்கள் அல்லது பதவியை ராஜிநாமாச் செய்யுங்கள்" என்று அந்தந்த தொகுதியிலுள்ள ஓட்டர்களிடம் கையெழுத்து வாங்கி அந்தந்த M. L. A.-க்கு அனுப்பி வைக்க வேண்டும்.

4 ஒவ்வொரு சப் கமிட்டியும் ஆரம்பத்தில் 10 தொண்டர்களை மட்டுமே வைத்துக்கொண்டு இவ்வேலைகளை ஆரம்பிக்கலாம். சிறைசெல்ல நேர்ந்தால். எண்ணிக்கை குறையக் குறைய புதிய அன்பர்களைச் சேர்த்துக்கொள்ளலாம்.

5. மந்திரிகள் எந்த ஊருக்கு வந்தாலும், ஆங்காங்குள்ள தமிழ் மக்கள் கறுப்புக்கொடி பிடித்தல் முதலியவைகளால் தங்களின் வெறுப்பைப் பகிரங்கமாகக் காட்டிக்கொள்ளலாம்.

6. "*எதற்கும் தயார்*" என்று கமிட்டிக்கு உறுதி கூறி, தொண்டுசெய்ய முன்வந்துள்ள இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட தமிழன்பர்களையும் கமிட்டி வரவேற்பதுடன் அவர்கட்கு நன்றியும் செலுத்துகிறது. அவர்கள் அனைவரும் தங்கள் தங்களிருப்பிடத்திற்கு சமீபமாயுள்ள, ஹிந்தி புகுத்தும் பள்ளிக்கூடமுள்ள தாலூக்காக்களில் ஏற்படுத்தும் சப் கமிட்டியிடம் தங்கள் தங்களின் பெயரை உடனே பதிவு செய்துகொள்ள வேண்டும்.

7. எந்த சப் கமிட்டிக்கேனும் வெளியூர் தொண்டர்கள் தேவைப்படுமானால் தெரிவித்தால், அனுப்பி வைக்கப்படும்.

8. எந்த சப் கமிட்டிக்கேனும் தொண்டர்களின் உணவு முதலிய செலவுகளுக்கு அந்த தாலூக்காக்களில் வசூலிக்கும் தொகை போதாதிருந்தால், மத்திய கமிட்டியிலிருந்து அனுப்பி வைக்கப்பெறும்.

9. தமிழ் மொழியையும், தமிழ் மக்களையும் பாதுகாக்க விரும்பும் தமிழ் அன்பர்கள் தாராளமாகப் பொருளுதவிசெய்ய முனைந்து, எழுந்து, முன்வரவேண்டும். ஒவ்வொரு நாளும் மணி ஆர்டர்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

*தங்களன்பிற்குரிய*

**கி. ஆ. பெ. விசுவநாதம்,**

அமைச்சரும், பொருளாளரும், திருச்சினாப்பள்ளி